செ.வெ.எண்.28 நாள்.10.10.2017.

**திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில் மாவட்ட அளவிலான திறன் போட்டியில் மாணவ, மாணவிகளின் படைப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.**

-------

திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில் மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் இன்று (10.10.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, போட்டியினை தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளின் படைப்புகளை நேரில் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில், மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் பிரிவு.1ல் பொறியியல்/பாலிடெக்னிக்/ஐடிஐ/கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவ, மாணவியர்கள் தொழிற்சாலைகளில் தொழில் பழகுனர்களாக பயிற்சி பெற்றவர்களும், பிரிவு.2ல் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், அமைப்புச்சார தொழில்களில் பணி அனுபவம் பெற்ற என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படுகிறது. முதல் பிரிவில் 160 படைப்புகளும், 2ம் பிரிவில் 7 படைப்புகளும் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்றுள்ளனர். மாநில அளவில் தேர்வு செய்யப்படும் சிறந்த படைப்புக்கு முதல் பரிசு ரூ.1 இலட்சமும், 2வது பரிசு ரூ.50 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. மாணவர்களின் திறனை ஊக்கப்படுத்தும் வகையில் இப்போட்டிகள் நடத்தப்படுகிறது. இப்போட்டிகள் நடத்தப்படுவது நோக்கம் படிக்கும் அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது குறைவாகவே உள்ளது. மாணவர்களின் திறனை வெளி கொணரும் வகையில் நடத்தப்படுகிறது. திறன் வெளிப்படுத்துவது என்பதை தொடர்ந்து செய்திட வேண்டும். தேவையின் அடிப்படையில் அனைத்தும் மாறுபட்டு கொண்டிருக்கும். இதுபோன்ற போட்டிகளின் மூலம் புதிய திறன் வெளிப்பட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். படிப்பதால் மட்டும் வேலை கிடைக்கும் என்பது உறுதியல்ல. தனித்திறனை வளர்த்துக் கொள்வதால் மட்டுமே, வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இச்சிறப்பான போட்டியில் பங்கேற்று, திறனை வெளிப்படுத்திய பங்கேற்பாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், தொழிற்பயற்சி நிலை துணை முதல்வர் திரு.வேல்முருகன், நெல்சியா திரு.சுந்தரேசன், அருள் இண்டஸ்டிரிஸ் திரு.ஜெப சுரேஷ், அவர் ஒன் மெட்ரிக் பள்ளி தாளாளர் திரு.சுந்தரேசன், தொழிற்பயிற்சி பள்ளி ஆசிரியர் திருமதி.சத்திய செல்வி பொன்னி மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.